# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## மதுவரி (திருத்தம்)

**(52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தைத்
திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நிதி அமைச்சர் அவர்களால் 2019, ஓகத்து மாதம் 08 ஆம் திகதியன்று
சமர்ப்பிக்கப்பட்டது*

*(2019, யூலை மாதம் 12 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

**[ 292 ஆம் சட்டமூலம் ]**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

**வாசகம் 2 :** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது பிடியாணையின்றி, தவறிழைத்தவர்களை கைதுசெய்வதற்கான ஏற்பாடுகளை விரிவாக்குவதற்கானதுமாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது கூடுதலான தவறுகளை நீதிவான் கவனத்துட்கொள்வதற்குத் தத்துவமளிப்பதற்காக பிரிவின் நோக்கெல்லையை விரிவாக்குவதற்கானதுமாகும்.

ச.வ.- ஓ. 46/2018

**(52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம் , 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மதுவரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 35 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், "46 ஆம் பிரிவின்கீழ் அல்லது 47 ஆம் பிரிவின்கீழ்த்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "46 ஆம், 47 ஆம் பிரிவுகளின் கீழ் அல்லது 48 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ்த்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது. (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அதன் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(அ) தனது சொந்த அறிவின்மீது அல்லது சந்தேகத்தின்மீது அல்லது ஒரு மதுவரி அலுவலரின் அல்லது பொலிசு அலுவலரின் முறைப்பாட்டின்மீது அல்லது அறிக்கையின்மீது தவிர, 46 ஆம் பிரிவின்கீழ், 47 ஆம் பிரிவின்கீழ் அல்லது 48 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ்:

ஆயின், எவ்வாறாயினும், ஒரு பொலிசு அலுவலர் 48 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழான முறைப்பாடொன்றைச் செய்யுமிடத்து அல்லது ஓர் அறிக்கையைக்

காண்பிக்குமிடத்து, அத்தகைய அலுவலர் உதவிப் பரிசோதகர் பதவி வரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள அலுவலரொருவராக இருத்தல் வேண்டுமென்பதுடன், அவர் மதுவரி ஆணையாளர்–தலைமையதிபதியின் அல்லது மதுவரி ஆணையாளர்–தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலரின் எழுத்திலான அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதலும் வேண்டும்;";

(2) அதன் (ஆ) என்னும் பந்தியில்,-

(அ) "48 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "48 ஆம் பிரிவின் (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியின்கீழ்" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) "49 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "49 ஆம் பிரிவின்கீழ், அல்லது" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அதன் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(இ) தனது சொந்த அறிவின்மீது அல்லது சந்தேகத்தின்மீது அல்லது ஒரு மதுவரி அலுவலரின் முறைப்பாட்டின்மீது அல்லது அறிக்கையின்மீது தவிர, 50 ஆம் பிரிவின்கீழ்.".

4. இச்சட்டத்தின் சிங்களம், தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.